# வானவில்

VAANAVIL
ISSUE – 8 AUGUST 2011

இதழ் - 8 ஆவணி 2011


# தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் திடீரெனப் பேச்சுவார்த்தையை முறித்தது எதற்காக? அடுத்து மீண்டும் ஆயுதப் போராட்டமா?



**த**மிழ் தேசியக் கூட்டமைப்பு, அரசாங்கத்துடன் நடாத்தி வந்த, இனப்பிரச்சினை சம்பந்தமான பேச்சுவார்த்தையை, திடீரென ஒரு தலைப்பட்சமாக முறித்துக் கொண்டுள்ளது. பேச்சுவார்த்தையை முறித்துக் கொள்ளும் தனது திட்டத்தை நிறைவேற்றுவதற்காக, அது அரசுக்கு சில நிபந்தனைகளையும் முன் வைத்துள்ளது.

தமிழ் கூட்டமைப்பின் இந்த திடீர் முடிவு, அரசியல் அனுபவஸ்தர்களால் முன்னரே எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்ட போதே, கூட்டமைப்பு நிச்சயமாக இந்தப் பேச்சுவார்த்தையை இடையில் முறித்துக் கொள்ளும் என, பலர் மிகவும் தீர்க்கதரிசனமாகக் குறிப்பிட்டிருந்தனர். அதற்குக் காரணம் தமிழ் தலைமைகளின் கடந்தகால வரலாறுதான்.

இலங்கையில் போர் முடிவடைவதற்கு முன்னர், தமிழ் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கி, அதை வழி நடாத்தி வந்த விடுதலைப் புலிகளும், இதே தந்திரோபாயத்தைத்தான் இலங்கை அரசுகளுடனான பேச்சுவார்த்தைகளின் போது செய்தார்கள் என்பதை, இங்கு நினைவுகூர்வது அவசியம்.

கடந்த காலங்களில் பதவியில் இருந்த அரசுகள், மிகக் கடினமான சிங்களப் பேரினவாதத்தைச் சமாளித்துக் கொண்டு சில தீர்வுகளுக்கு வந்தபோது, அவற்றை ஐ.தே.கவும், அதன் வர்க்க – அரசியல் சகபாடிகளான தமிழ் தலைமைகளும் சேர்ந்து குழப்பிய வரலாறு நிறைய உண்டு.

1957ல் செய்து கொள்ளப்பட்ட பண்டாரநாயக்க – செல்வநாயகம் உடன்படிக்கை, 1987ல் செய்து கொள்ளப்பட்ட இந்திய – இலங்கை உடன்படிக்கை, 2000ம் ஆண்டில் சந்திரிகா அரசு கொண்டு வந்த தீர்வுத் திட்டம் என, எல்லாவற்றையும், ஐ.தே.கவும் தமிழ் தலைமைகளும் சேர்ந்தே குழப்பி வந்ததை யாரும் மறுத்துவிட முடியாது.

ஆரம்பத்திலிருந்தே தமிழ் கூட்டமைப்பு அரசுடன் பேசுவதில் விருப்பமில்லாமலே இருந்து வந்தது. கூட்டமைப்பின் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் பேச்சுவார்த்தை ஆரம்பமான போது, அதை எதிர்த்து பகிரங்கமாகவே அறிக்கை விடுத்தனர். இந்தியாவினதும், அமெரிக்கா உட்பட மேற்கத்தைய சக்திகளினதும் அழுத்தம் காரணமாகவே தமது தமிழ் தேசியக் கூட்டமைப்பும், அரசாங்கமும் பேச்சுவார்த்தைக்குச் சம்மதித்தன என்ற உண்மையை, கடந்த மாதம் பிரித்தானியா சென்றிருந்த நேரம் பி.பி.சி தமிழோசைக்கு வழங்கிய பேட்டியயொன்றில், கூட்டமைப்பின்

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...

**நூறு சிந்தனை மலரட்டும்**

# அரசியல் விவகாரங்களில் இராணுவத் தலையீடு தவிர்க்கப்பட வேண்டும்

வானவில்

இலங்கையின் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச, 'புலிகளை அழித்தாயிற்று, இனி இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அதிகாரப் பகிர்வு எதுவும் தேவையில்லை' என்று, இந்திய ஊடகமொன்றுக்கான தனது செவ்வியில் தெரிவித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தச் செய்தியை அவர் இதுவரை மறுக்கவும் இல்லை. அவரது இந்தக் கூற்றை விமர்சித்து, இந்தியாவின் பிரபல நாளிதழான 'த இந்து' எழுதிய ஆசிரிய தலையங்கத்தையும், திருவாளர் கோத்தபாய குறை கூறியிருக்கிறார். எனவே அவர் அவ்வாறு கூறியது உண்மைதான் என்று கருத ஏதுண்டு.

பாதுகாப்பு செயலாளர் கோத்தபாயவின் சொந்தச் சகோதரர் மகிந்த ராஜபக்ச, மக்களால் தெரிவு செய்யப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருக்கிறார். மகிந்தவின் மகன் இளவல் நமல் ராஜபக்ச, பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டு, வாரிசாக உருவாகி வருகிறார். மகிந்தவின் இன்னொரு சகோதரரான பசில் ராஜபக்ச, அரசில் சக்திவாய்ந்த பொருளாதார அமைச்சராக இருக்கிறார். இன்னொரு சகோதரர் சமல் ராஜபக்ச, இலங்கைப் பாராளுமன்றத்தின் அதிஉயர் பதவியான சபாநாயகர் பதவியில் வீற்றிருக்கிறார். இதைவிட மகிந்தவின் அரசில், பிரதமர் உட்பட பலகட்சிகளைச் சேர்ந்த மந்திரி பிரதானிகள் இருக்கின்றாாகள்.

இவர்கள் எல்லோருமே, அரச விவகாரங்களையும், அரசியல் விவகாரங்களையும், தமது முழு நேரங்களையும் ஒதுக்கிக் கவனித்து வருகிறார்கள். அப்படியிருக்க மக்களால் தெரிவுசெய்யப்படாத, இராணுவ அனுபவம் காரணமாகவும், ஜனாதிபதியின் சகோதரர் என்பதற்காகவும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்ட கோத்தபாய, இலங்கையின் அதிமுக்கிய பிரச்சினையான, தேசிய இனப்பிரச்சினை சம்பந்தமாக கருத்துச் சொல்ல வேண்டிய – அதுவும் பாதகமான முறையில் சொல்ல வேண்டிய - தேவை எதற்காக வந்தது? அவருக்கு அந்த அதிகாரத்தை வழங்கியவர் யார்?

இதேபோலத்தான், முன்பு முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, பதவியில் இருந்த காலத்திலேயே, தமிழர்கள் வந்தேறு குடிகள் என்றும், அவர்கள் வேணுமானால் இலங்கையில் வாழ்ந்துவிட்டுப் போகலாமேயொழிய, உரிமைக் கதைகள் எதுவும் பேசக்கூடாது எனவும், திருவாய் மலர்ந்திருந்தார். (அத்தகைய 'மகானைத்தான்' ஜனாதிபதித் தேர்தலில் ஆதரிக்கும்படி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களைக் கோரியிருந்தது!)

இராணுவம் என்பது ஒரு நாட்டின் பாதுகாப்புக்காக உள்ள ஒரு மிக முக்கியமான அமைப்பு. அது இன, மத, மொழி கடந்து செயற்பட வேண்டும். சில வேளைகளில் நாடு எதிர்நோக்கும் ஆயுதம் தாங்கிய அபாயத்தை முறியடிப்பதற்கு அரசுக்கு உதவ வேண்டிய பொறுப்பும் அதற்குண்டு. அந்த வகையில்தான், இலங்கை இராணுவம் நாடு எதிர்நோக்கிய புலி மாபியாப் பயங்கரவாதத்தை முறியடிக்க மக்களுக்கும் அரசுக்கும் உதவியது. அந்த குருசேத்திர யுத்தத்தில், இராணுவத்தை வழி நடாத்திய பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்சவுக்கும், இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கும், மற்றும் இராணுவ அதிகாரிகளுக்கும் நிச்சயமாக உயரிய பங்களிப்புண்டு.

ஆனால் இப்பொழுது நாடு எதிர்நோக்குவது பயங்கரவாதப் பிரச்சினையையல்ல, அரசியல் பிரச்சினை. அதற்குத் தீர்வுகாண வேண்டியவர்கள் அரசும், அரசியல் கட்சிகளும்தான். அத்தகைய ஒரு நிலைமையில் அனுபவம் வாய்ந்த இராணுவ அதிகாரியான கோத்தபாய, அரசுக்கு நெருக்கடியை உண்டுபண்ணும், அரசு மீதான மக்களின் நம்பிக்கையைச் சிதறடிக்கும், விபரீத செயல்களில் ஈடுபடுவது அரசுக்கும் நாட்டுக்கும் நல்லதல்ல. அரசியல் விவகாரங்களை அதற்குரியவர்களிடம் விட்டுவிட்டு தனக்குரிய கடமைகளை அவர் மேற்கொள்வது நாட்டுக்கும் நல்லது, அவருக்கும் நல்லது.

அதேவேளையில், அரசும் இவ்விடயத்தில் மெத்தனமாக இருக்கக்கூடாது. அரசியலில்


**தொடர்பு முகவரி:**
'வானவில்' இதழுக்கு கட்டுரைகள், துணுக்குகள், தகவல்கள், விமர்சனங்கள், ஆலோசனைகள் என்பனவற்றை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
sunvaanavil@gmail.com

பாதுகாப்பு தரப்பினரின் அதீதமான தலையீடுகளைக் குறைத்து, மக்களின் நம்பிக்கையை வென்றெடுப்பதற்கு அரசாங்கம் சில நடவடிக்கைகளை இப்பொழுதே மேற்கொள்வது அவசியம். அதாவது அவசரகாலகட்டத்தை முற்றிலுமாக நீக்க வேண்டும். பயங்கரவாத தடைச் சட்டத்திலுள்ள மக்கள் விரோத சரத்துகளை அகற்ற வேண்டும். தேவையற்ற இடங்களிலுள்ள இராணுவத்தினரை திருப்பியழைத்து, பாசறைகளில் வைக்க வேண்டும்.

வெளிநாட்டு தூதுவர்களாகவும், மாகாண ஆளுநர்களாகவும், அரச உயர் அதிகாரிகளாகவும், முன்னாள் இராணுவ அதிகாரிகளை நியமிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

இவைகளைச் செய்வதில் அரசு கவனமெடுக்காவிடின், இப்பொழுது இல்லாவிடினும், எதிர்காலத்தில் எதிர்மறையான விளைவுகள் ஏற்பட வாய்ப்புண்டு

*



# ‘துரோகி’யால் திறக்கப்பட்ட சங்கிலியன் சிலை!

**2001** ஆகஸ்ட் 03ந் திகதி, யாழ் முத்திரைச் சந்தியில் மாநகரசபையால் புனரமைப்பு செய்யப்பட்ட சங்கிலி மன்னனின் சிலையை, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வைபவரீதியாகத் திறந்து வைத்தார். யாழ் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அரச உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் என பெருந்தொகையானோர் கலந்து கொண்டனர்.

ஊடக தர்மத்தைக் காலில் போட்டு மிதித்த வண்ணம் செயல்பட்டு வரும் யாழ் ‘உதயன்’ பத்திரிகை, இலங்கையில் நிலவுகின்ற தாராளமான ஊடக சுதந்திரத்தைப் பயன்படுத்தி, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை ‘துரோகி’ என வர்ணித்து வக்கணை செய்து எழுதியபோதும், யாழ் மாநகரசபையின் எதிர்க்கட்சித் தலைவரான தமிழ் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த சட்டத்தரணி ரெமீடியசும் இந்நிகழ்வில் கலந்த கொண்டு, சபையினதும், மனிதப் பண்பாட்டினதும் விழுமியங்களைப் பாதுகாத்துக் கொண்டார்.

இந்த சங்கிலியன் சிலை புனரமைப்புக்காக மறைப்புக் கட்டப்பட்ட நேரத்தில், உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் நடைபெறவிருந்த தருணமாகையால், தமிழர்களின் கடைசி மன்னனின் சிலையை சிங்களப் ‘பேரினவாத’ அரசும், ‘துரோகி’ டக்ளசும் சேர்ந்து இடித்துவிட்டார்கள் என, தமிழ் தேசியக் கூட்டமைப்பு உண்மைக்குப் புறம்பாகப் பிரச்சாரம் செய்து, தமிழ் மக்களில் ஒரு பகுதியினரின் வாக்குகளைக் கொள்ளையடித்துக் கொண்டது. ஆனால் ‘கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்கு’ என்பது போல, இப்பொழுது கம்பீரமாக எழுந்து நிற்கும் சங்கிலியன் சிலை, கூட்டமைப்பினரைப் பார்த்து எள்ளி நகையாடுகிறது.

இதில் இன்னொரு சுவாரசியமான விடயமென்னவெனில், இந்த சங்கிலியன் சிலையை முதலில் நிறுவியவர், தமிழர் விடுதலைக் கூட்டணியினரால் ‘துரோகி’ பட்டம் சூட்டப்பட்டு, புலிகளின் மூலம் படுகொலை செய்யப்பட்ட, யாழ் மாநகர சபையின் முன்னாள் மக்கள் முதல்வர் அல்பிரட் துரையப்பா என்பதுதான். இந்தச் சங்கிலியன் சிலையை மட்டுமின்றி, யாழ் நகரில் அமைக்கப்பட்ட திருவள்ளுவர், ஔவையார், பாரதியார், சோமசுந்தரப்புலவர் என அத்தனை சிலைகளையும் நிறுவியவர், இந்த ‘துரோகி’ துரையப்பா தான்.

**ஓர் உபரித் தகவல்:** தமிழர்களின் கடைசி மன்னன் என, தமிழ் தேசியவாதிகளால் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடப்படும் இந்த சங்கிலியன் தான், மன்னாரில் தனது படைகளை அனுப்பி நூற்றுக்கணக்கான முஸ்லீம்களையும், கிறிஸ்தவர்களையும் வாள்களால் தலைகளைச் சீவி படுகொலை செய்வித்தவன் என்பது குறிப்பிடத்தக்கது. பின்னாளில் புலிகளும் அவனது அடிச்சுவட்டைப் பின்பற்றியே நடந்து கொண்டனர் என்பது, சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

*

1953 ஆகஸ்ட் 12 மாபெரும் ஹர்த்தால் போராட்டத்தின் 58வது ஆண்டு நினைவாக

# ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியை விரட்டிய மக்கள் போராட்டம்!

– குருஷேத்திரன் –



நவீன இலங்கையின் வரலாற்றில், 1953 ஆகஸ்ட் 12ம் திகதி அன்று ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசியக்கட்சி அரசுக்கெதிராக, இலங்கையின் தொழிலாளி வர்க்கத்தாலும், மக்களாலும் நடாத்தப்பட்ட மாபெரும் ஹர்த்தால் போராட்டம், பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒரு ஒன்றாகும்.

'அரிசி ஹர்த்தால்' என, முதலாளித்துவ, பிற்போக்கு, இனவாத தமிழரசு – தமிழ் காங்கிரஸ் கட்சிகளால் பிற்காலத்தில் எள்ளி நகையாடப்பட்ட இந்தப் போராட்டம், இலங்கைத் தொழிலாளி வர்க்கத்தை மட்டுமின்றி, சிங்கள – தமிழ – முஸ்லீம் மக்களை இன, மொழி, மத பேதமின்றி ஒன்றுபட வைத்த ஒரு நிகழ்வாகும்.

இலங்கை மக்களால் நிகழ்த்தப்பட்ட இந்த மாபெரும் போராட்டம், 1956ல் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க தலைமையில் ஒரு ஏகாதிபத்திய விரோத அரசையே உருவாக வழி சமைத்தது என்றால், அதன் தாக்கத்தை உணர்ந்து கொள்ள முடியும்.

47 வருடங்களுக்கு முன்னர் நடந்த மாபெரும் போராட்டத்தின் வரலாற்றை நினைவுகூரும் போது, அது நடைபெறுவதற்கு முன்னர் நாட்டில் நிலவிய அரசியல் சூழலையும் தெரிந்து கொள்வது அவசியமானது.

இலங்கைக்கு 1948 பெப்ரவரி 4ம் திகதி பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்களினால் சுதந்திரம் வழங்கப்பட்டது. அதற்கு முன்னதாக 1947 மே – ஜூனில் இலங்கையில் இடதுசாரி தொழிற்சங்கங்களின் தலைமையில் மாபெரும் பொது வேலைநிறுத்தம் ஒன்று நிகழ்ந்தது.

இரண்டாம் உலகப் போர் முடிவுற்றதைத் தொடர்ந்து, பல தொழிற்துறைகளில் ஆட்குறைப்பு, சம்பளக் குறைப்பு, விலைவாசி உயர்வு என்பன ஏற்பட்டதால், தொழிலாளர்கள் மத்தியில் அமைதியின்மை நிலவியது. தமக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கு நிவாரணம் கோரி தொழிலாளர்கள் பொது வேலை நிறுத்தத்தில் குதித்தனர்.

அரசாங்கம் கடுமையான சட்டங்களை இயற்றி, வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்கள் மீது அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டது. தொழிற்சங்கத் தலைவர்கள் கைதுசெய்யப்பட்டு, தொழிற்சங்க காரியாலயங்களும், இடதுசாரி அச்சகங்களும் சீல் வைக்கப்பட்டன. பொலிஸ் மாத்திரமின்றி இராணுவமும் வீதிக்கு அழைக்கப்பட்டது. மேலதிகமாக பிரிட்டிஸ் மகாராணியின் கடற்படையும் வீதிகளில் நிறுத்தப்பட்டது.

இன்று தனிப்பட்ட முதலாளிகளால் நடாத்தப்படும் பத்திரிகைகளைப் போன்றே, அன்றும் ஐ.தே.க முதலாளிகளால் நடாத்தப்பட்ட ஏரிக்கரை (லேக்ஹவுஸ்) பத்திரிகைகளும், ஏனைய பத்திரிகைகளும் வேலை நிறுத்தத்தை முறியடிக்க சகலவிதமான பிரச்சாரப் பிரயத்தனங்களும் செய்தன.

கொலன்னாவையிலிருந்த பிரிட்டிஸ் எண்ணெய் குதங்களை நோக்கிச் சென்ற தொழிலாளர்களின் ஊர்வலம் ஒன்றின் மீது பொலிஸ் சுட்டதில், கந்தசாமி என்ற தமிழ் அரசாங்க ஊழியர் கொல்லப்பட்டார். அவரது தியாகத்திற்கு அஞ்சலி செலுத்துவதற்காக இன, மொழி, மத பேதமின்றி ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் கொழும்பு காலிமுகத்திடலில் கூடியதுடன், அவரது பூதவுடலை கோட்டை புகையிரத நிலையத்திற்கு ஊர்வலமாக எடுத்துச் சென்று யாழ்ப்பாணத்திற்கும் அனுப்பி வைத்தனர்.

தொழிலாளர்களின் ஒன்றுபட்ட வேலை நிறுத்தம் அரசாங்கத்தையே ஆட்டங்காண வைத்தது. ஒரு கட்டத்தில் வேலை நிறுத்தத்தின் உறுதிப்பாட்டைக் கண்டு அஞ்சிய சேர் ஜோன் கொத்தலாவல, அரசாங்கத் தலைவரான

டி.எஸ்.சேனநாயக்கவிடம் சென்று, தொழிலாளர்களின் கோரிக்கைகளை வழங்கும்படி ஆலோசனை கூறியதாகவும், அதற்கு சேனநாயக்க, ''லயனல், நீங்கள் ஒரு இராணுவாக்காரன் என்று நினைத்தேன்'' என அவரைக் கிண்டல் செய்ததாகவும் கூறப்படுவதுண்டு.

எப்படியிருந்த போதிலும், அரசாங்கம் கடுமையான அடக்குமுறைகளைப் பாவித்து, வேலை நிறுத்தத்தைத் தோற்கடித்தது. பொலிசார் வேலை நிறுத்தக்காரர்களுடன் மிகக் கடுமையாக நடந்து கொண்டனர். அப்போது பொலிஸ் துறைக்குப் பொறுப்பான உள்துறை அமைச்சராக இருந்தவர், மகாதேவா என்ற தமிழர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளுக்கும், அவர்களது உள்நாட்டு அடிவருடிகளாகவிருந்த ஐ.தே.கவுக்கும் எதிரான இந்த மாபெரும் வேலை நிறுத்தம் தோல்வியில் முடிவடைந்தாலும், தொழிலாளி வர்க்கத்தினதும், பொதுமக்களினதும் எதிர்ப்புணர்வு, அரசுக்கெதிராக எவ்வளவு தூரம் இருந்தது என்பதை, அடுத்து வந்த 1947 பொதுத்தேர்தல் முடிவுகள் எடுத்துக்காட்டின.

1947ல் நடந்த பொதுத் தேர்தலில் கணிசமான தொகுதிகளில் ஐ.தே.கவுக்கு எதிரான வேட்பாளர்கள் வெற்றியீட்டினர். முக்கியமாக, இந்திய வம்சாவளி மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் வாழ்ந்த பகுதிகளில், ஐ.தே.க எதிர்ப்பு வேட்பாளர்கள் அமோக வெற்றி பெற்றனர். இதனால் ஏற்பட்ட ஆத்திரம் காரணமாகவே, டி.எஸ்.சேனநாயக்கவின் ஐ.தே.க அரசு பதவிக்கு வந்தவுடனேயே, முதல் வேலையாக இந்திய வம்சாவழித் தொழிலாளர்களின் பிரஜாவுரிமையையும், வாக்குரிமையையும் பறித்தெடுத்து அவர்களை நாடற்றவர்களாக்கியது.

ஐ.தே.க அரசின் இந்தப் பழிவாங்கல் நடவடிக்கையை, ஜீ.ஜீ.பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் காங்கிரஸ் கட்சி (பின்னர் பிரிந்து சென்று தமிழரசுக் கட்சியைத் தொடங்கிய கு.வன்னியசிங்கம், எஸ்.ஜே.வி.செல்வநாயகம், ஈ.எம்.வி. நாகநாதன் போன்றோரும் அப்பொழுது அக்கட்சியிலேயே இருந்தனர்) பாராளுமன்றத்தில் ஆதரித்து வாக்களித்து, மலையக மக்களுக்குத் துரோகமிழைத்தது.

1947 பொதுத் தேர்தல் முடிவுகளைப் பார்த்து, ஏகாதிபத்தியவாதிகளும், உள்நாட்டுப் பிற்போக்குவாதிகளும் அதிர்ச்சியடைந்தனர். ஏனெனில் இடதுசாரிக் கட்சிகளின் வெற்றியானது, அவர்களது தலைமையில் ஒரு அரசாங்கம் அமையக்கூடிய அளவுக்கு இருந்தது.

இடதுசாரிகள் ஐக்கியப்பட்டு, ஏனைய முற்போக்கு – ஜனநாயக சக்திகளையும் ஒற்றுமைப்படுத்தி, தமிழினப் பிரதிநிதகளான ஜீ.ஜீ. பொன்னம்பலம், சி.சுந்தரலிங்கம் போன்றோரின் காட்டிக்கொடுப்பு, கழுத்தறுப்பு வேலைகளும் நடைபெறாமல் இருந்திருந்தால், சுதந்திர இலங்கையின் முதலாவது அரசாங்கமாக, ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்பு, முற்போக்கு அரசு அமைவதற்கு வாய்ப்பிருந்தது.

டி.எஸ்.சேனநாயக்கவின் மறைவின் பின்னர், 1952ல் நடந்த பொதுத் தேர்தலின் மூலம், அவரது புதல்வாரன டட்லி சேனநாயக்க பிரதமரானார்.

அவரது அரசாங்கத்தில், தீவிர ஏகாதிபத்திய விசுவாசி என எல்லோராலும் நன்கறியப்பட்ட ஜே.ஆர்.ஜெயவர்த்தன நிதியமைச்சராக நியமிக்கப்பட்டார். அவர் நிதியமைச்சராகப் பொறுப்பேற்ற பின்னர், 1953ல் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த வரவு செலவுத் திட்டத்தில், நாட்டு மக்கள் மீது பாரதூரமான பொருளாதாரச் சுமைகளைச் சுமத்தினார்.

பொருளாதார நெருக்கடியிலிருந்து தனது அரசைக் காப்பாற்றும் பொருட்டு, அமெரிக்காவின் தலைமையிலிருந்த உலக வங்கியின் ஆலோசனைகளை ஏற்ற ஜே.ஆர்., இலவச அரிசி மானியத்தை நீக்கி, 25 சதமாக இருந்த ஒரு படி அரிசியின் விலையை 70 சதமாக உயர்த்தினார். அத்துடன் தபால் – தந்தி மற்றும் போக்குவரத்துக் கட்டணங்களை உயர்த்தினார். பாடசாலைப் பிள்ளைகளுக்கு மதிய உணவாக வழங்கப்பட்டு வந்த, இலவச பணிசை பறித்தெடுத்தார்.

இதனால் ஆத்திரமுற்ற பொதுமக்கள், ஐ.தே.க அரசின் மீது பெரும் கோபாவேசம் கொண்டனர். அரசின் இந்த முடிவுகளுக்கெதிராக இடதுசாரித் தொழிற்சங்கங்கள் 1953 ஆகஸ்ட் 12ம் திகதி, நாடு தழுவிய ஹர்த்தால் ஒன்றுக்கு அழைப்பு விடுத்தன.

ஹர்த்தாலுக்கு முன் தயாரிப்பாக நாடு முழுவதும் நூற்றுக்கணக்கான பொதுக்கூட்டங்கள் நடாத்தப்பட்டன. இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜ கட்சி, பிலிப் குணவர்த்தனவின் மக்கள் ஐக்கிய முன்னணி ஆகிய மூன்று இடதுசாரிக் கட்சிகளும், அவர்களது தொழிற்சங்கங்களுமே இந்த ஹர்த்தாலை முன்னின்று ஏற்பாடு செய்தன.

ஐ.தே.கவிலிருந்து பிரிந்து சென்ற பண்டாநாயக்க உருவாக்கிய சிறீலங்கா சுதந்திரக் கட்சியும், தமிழ் காங்கிரசில் இருந்து பிரிந்து சென்று கு.வன்னியசிங்கம் அமைத்திருந்த தமிழரசுக் கட்சியும், முதலில் இந்த ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை. ஆனால் தனது ரோஸ்மீட்

பிளேஸ் இல்லத்தில் தன்னைச் சந்தித்த தொழிற்சங்கப் பிரதிநிதிகளிடம், பண்டாரநாயக்க ஹர்த்தாலுக்கான தனது ஆதவைத் தெரிவித்திருந்தார்.

ஹர்த்தாலுக்கான பொது மக்களின் ஆதரவு மிகவும் உணர்வுபூர்வமாகவும், உற்சாகமாகவும் இருந்தது. இதைக்கண்டு மக்களிடமிருந்து விலகி நிற்க விரும்பாத பண்டாரநாயக்க, ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவித்து கொழும்பு கோல்பேஸ் மைதானத்தில் நடைபெற்ற பிரமாண்டமான இறுதிப் பொதுக்கூட்டத்தில் பங்குபற்றி உரையாற்றினார். அதேபோல, யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் நடைபெற்ற மாபெரும் இறுதிப் பொதுக்கூட்டத்தில் தமிழரசுக் கட்சி சார்பில் வன்னியசிங்கம் பங்குபற்றி உரையாற்றினார்.

அரசாங்கம் எவ்வளவோ முயற்சிகளை எடுத்த போதிலும், ஹர்த்தாலின் வெற்றியைத் தடுக்க முடியவில்லை. பஸ், ரயில் சேவைகள் முற்றாக ஸ்தம்பித்தன. தபால் தந்தி சேவைகள் இயங்கவில்லை. காரியாலயங்கள், பாடசாலைகள் நடைபெறவில்லை. கடைகள் எதுவும் திறக்கப்படவில்லை. நாடு முழுவதும் மக்கள் வீதிகளில் கூடியிருந்தனர். அவர்கள் வீதித் தடைகளை நிறுவினார்கள். பொலிசாரும் இராணுவத்தினரும் செயற்பட முடியாத நிலை ஏற்பட்டது. சட்டம் ஒழுங்கு முற்றாகச் சீர்குலைந்தது. அரசாங்கம் முற்றிலுமாக செயலற்ற நிலைக்குத் தள்ளப்பட்டது.

மலையகத் தோட்டத் தொழிலாளர்களையும் இந்த ஹர்த்தாலில் பங்குபற்ற வைக்க பெரும் முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஏ.அஸீஸ் தலைமையிலான பகுதியினர் இதில் ஆர்வம் காட்டிய போதிலும், அப்போதைய இந்தியத் தூதுவராலயத்தின் செல்வாக்குக் காரணமாக, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இந்தச் சரித்திர முக்கியத்துவமிக்க போராட்டத்தில் ஒதுங்கியே இருந்தது.

## ✸வை.கோவுக்கு மன்மோகன்சிங் காட்டிய சீனப் பூச்சாண்டி!

**- பாண்டியன்**

**அ**ண்மையில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக பொதுச்செயலாளர் வை.கோபாலசாமி, இந்தியத் தலைநகர் புதுடில்லி சென்று பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்து உரையாடினார். ஒரு தமிழக அரசியல் தலைவர் தமது பிரதமரைச் சந்திக்கிறார் என்றால், தனது மாநில மக்களின் பிரச்சினைகள் குறித்தே உரையாடுகிறார் என்றுதான் அர்த்தம். பெரும்பாலும் இந்தியாவின் மற்றைய மாநிலங்களின் அரசியல் தலைவர்கள் அவ்வாறுதான் செய்வார்கள்.

ஆனால், 'தமிழன் என்றோர் இனமுண்டு, தனியே அவர்க்கோர் குணமுண்டு' என்பது போல, தமிழக அரசியல் தலைவர்கள் மட்டும், தமது மாநிலத்தில் தீர்க்கப்பட வேண்டிக் குவிந்து கிடக்கும் ஏராளமான பிரச்சினைகளை விட்டுவிட்டு, இலங்கை, சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளைப் பற்றிப் பேசுவதற்கே புதுடில்லிக்கு காவடி தூக்குவது வழமை. எனவே வழமைப் பிரகாரம் வை(க்)கோ(ல்) புலி மன்மோகனைச் சந்தித்து, இலங்கைக்கு எதிராக வசைபாடிவிட்டு வந்திருக்கிறது.

கருணாநிதியால் உதைத்துத் தள்ளப்பட்டு, ஜெயலலிதாவால் கழுத்தறுக்கப்பட்டு, தமிழகத் தமிழர்களாலும் கைவிடப்பட்டு, அரசியல் வனாந்திரத்தில் நின்றுகொண்டு புலம்பெயர் புலித் தமிழர்கள் போடும் பிச்சையில் அரசியல் பிழைப்பு நடாத்தி வரும் வை.கோ, ஜெயலலிதா அரசால் இலங்கைக்கு எதிராக இந்திய அரசு பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என நிறைவேற்றப்பட்ட, முட்டாள்தனமான தீர்மானத்தை தூக்கிக் கொண்டு டில்லி வரை சென்று, அரசியல் பிரபலம் தேட முயற்சித்திருக்கிறார்.

ஆனால் ஆனானப்பட்டவர்களுக்கெல்லாம் தலையைச் சுற்றிய மன்மோகன் சிங், இலங்கைக்கு எதிராகப் பொருளாதாரத் தடை விதித்தால், சீனா அங்கு ஆழமாகக் காலூன்றி விடும் என்று சீனப் பூச்சாண்டி காட்டி, வை.கோவின் காதில் பூச்சுற்றி, திருப்பி அனுப்பி வைத்திருக்கிறார். தென் சூடான் போல, இலங்கையிலும் ஐ.நா மூலம் கருத்துக் கணிப்பு நடாத்தி, இலங்கைத் தமிழர்களுக்கு தனிநாடு ஒன்றை உருவாக்க, இந்திய அரசாங்கம் முயற்சி எடுக்க வேண்டும் என்ற வை.கோவின் இன்னொரு வேண்டுகோளையும் மன்மோகன் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

பாவம், மன்மோகன் தான் என்ன செய்வார்? இலங்கைக்கு எதிராகப் பொருளாதாரத் தடை விதித்து, இந்தியப் பெரு முதலாளிகளும், அவர்களைப் பாதுகாக்கின்ற இந்திய அரசும், அங்கு செய்திருக்கின்ற பெருந்தொகையான முதலீடுகளையும், அதனால் வருகின்ற கொள்ளை கொள்ளையான லாபங்களையும் எப்படியப்பா கைவிடுவது? என, வை.கோவிடம் அவர் கேட்கவா முடியும்? அல்லது கேட்டாலும் வை.கோ போன்றவர்களுக்கு அது விளங்கத்தான் போகின்றதா?

எனவே இந்திய அரசுக்கு எப்போதும் இருக்கவே இருக்கின்றது, சீன – பாகிஸ்தான் பூச்சாண்டிகள். தருணத்துக்கு ஏற்றவாறு அதில் ஒன்றைத் தூக்கி வீசிவிட்டு இருக்க வேண்டியதுதான். அப்போதைக்கு அந்தப் பிரச்சினை பைசலாகிவிடும். ✸

ஒரு துப்பாக்கி தன்னும் இல்லாமல், மக்கள் ஐக்கியம் என்ற சக்தியினால் இந்தச் சாதனை நிகழ்த்தப்பட்டது.

அரசாங்கம் பகல் 12 மணிக்கு கலகச் சட்டத்தையும், பின்னர் அவசரகாலச் சட்டத்தையும் பிரகடனம் செய்தது. ஊரடங்கு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது. மக்களைக் கலைப்பதற்காக சுடுவதற்கான உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது. ஐ.தே.க அரசின் பொலிஸ் சூட்டதில் 12 பொதுமக்கள் உயிரிழந்த போதிலும், மக்கள் எதற்கும் அஞ்சாது போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

அரசாங்கம் செய்வதறியாது திணறியது. இலங்கைத் தீவின் எந்தவொரு இடத்திலும் தனது மந்திரி சபைக் கூட்டத்தைப் பாதுகாப்பாக நடாத்த முடியாத பிரதமர் டட்லி சேனநாயக்க, இறுதியில் கொழும்பு துறைமுகத்தில் தரித்து நின்ற பிரிட்டிஸ் யுத்தக் கப்பல் ஒன்றில் தனது மந்திரி சபைக் கூட்டத்தை நடாத்த வேண்டிய, அவலமான கேவலமான நிலைக்குத் தள்ளப்பட்டார்.

இருந்த போதிலும், மக்களின் ஆவேசமான கோப அலைக்கு முகம் கொடுக்க முடியாது அச்சத்தில் உறைந்து போன டட்லி, இறுதியாக அரசியலை விட்டு ஒதுங்கி தான் பௌத்த துறவியாகப் போவதாக அறிவித்து, நாட்டைவிட்டே வெளியேறினார். அதைத் தொடர்ந்து, ‘‘இலங்கையில் இடதுசாரிகள் வன்முறையின் மூலம் ஆட்சியைக் கைப்பற்றவிட்டார்கள்’’ என்ற தலைப்புச் செய்தியைத் தாங்கி, உலகப் பத்திரிகைகள் வெளிவந்தன.

ஆனால், மறுபக்கத்தில் தொழிலாளி வர்க்கத்தினதும், பொதுமக்களினதும் ஐ.தே.க அரசுக்கெதிரான எழுச்சி இவ்வளவு தூரம் பிரமாண்டமானதாக இருக்கும் என எதிர்பார்க்காத இடதுசாரித் தலைவர்கள், அடுத்து என்ன செய்வது என்று தெரியாது திகைத்து நின்றனர். நாட்டு மக்களின் அரசியல் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றி வைக்கக்கூடிய திட்டங்கள் எதுவும் அவர்களிடம் இருக்கவில்லை. எனவே அன்று மாலையே ஹர்த்தால் போராட்டத்தை வாபஸ் பெறுவதாக அறிவித்தனர்.

இந்தப் பின்வாங்கலைத் தொடர்ந்து வந்த மாதங்களில், அரசு இயந்திரத்தின் மிகக் கடுமையான அடக்குமுறை நடவடிக்கைகளை, இடதுசாரி இயக்கங்களும், தொழிற்சங்க அமைப்புகளும் எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டது. இந்த ஹர்த்தால் தொழிலாளி வர்க்கத்துக்கோ, மக்களுக்கோ உடனடி நன்மை எதனையும் ஏற்படுத்தவில்லை என்பது உண்மையே. ஆனால் இலங்கை வரலாற்றில் பெறுமதிமிக்க பல பாடங்களை, இப்போராட்டம் மக்களுக்கு வழங்கியது.

அதில் முக்கியமானது, ஏகாதிபத்தியத்தையும் அதன் உள்ளூர் பிரதிநிதியான ஐ.தே.கவையும் எதிர்ப்பதில், இலங்கை மக்கள் ஏனைய நாடுகளின் மக்களுக்கு சளைத்தவர்கள் அல்ல என்ற விடயம், வரலாற்று ஏடுகளில் என்றென்றும் அழிக்கப்பட முடியாதவாறு பதிவு செய்சப்படுவதற்கு, இப்போராட்டம் வழிவகுத்தது.

இன்னொன்று, மக்கள் எவ்வளவுதான் எழுச்சிமிக்கவர்களாகவும், தியாகத்திற்கு அஞ்சாதவர்களாகவும் இருந்தாலும், சரியான தலைமைத்துவம் இல்லாவிடின், அவர்களது தியாகங்கள் விழலுக்கிறைத்த நீராகிவிடும் என்ற பாடத்தையும் இப்போராட்டம் வழங்கியுள்ளது.

1953 ஆகஸ்ட் 12 ஹர்த்தால் போராட்டம், ஏகாதிபத்திய சார்பு – பிற்போக்கு ஐ.தே.க அரசால் இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்டாலும், புகழ்பூத்த அந்தப் போராட்டத்தின் உணர்வலைகளே, 1956 ஆண்டு பொதுத்தேர்தலில் வெற்றிபெற்று, எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க தலைமையில் ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்பு அரசு இலங்கையில் அமைய வழிவகுத்தது. அந்தத் தேர்தலில் மக்கள், ஐ.தே.கவை ஆக எட்டே எட்டுத் தொகுதிகளில் முடக்கி பாடம் கற்பித்தனர். அதேபோல சரியான நிலைப்பாடும், உறுதியான தன்மையும் கொண்டிராத இடதுசாரிக் கட்சிகளுக்கும், மக்கள் தகுந்த தண்டனை கொடுத்து, இன்றைய தேய்வு நிலைக்குக் கொண்டுவந்து விட்டுள்ளனர். மகத்தான ஹர்த்தால் போராட்டம் நடைபெற்று 47 ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும், அதிலிருந்து பாடங்கள் எதையும் கற்றுக்கொள்ளாத ஐ.தே.க, இன்றும் அதே ஏகாதிபத்திய சார்பு, தேசத்துரோக, மக்கள் விரோத அரசியல் பாதையிலேயே பயணித்து வருகிறது.

அதேநேரத்தில், இன்று தொழிலாளி வர்க்கமும் இதர உழைக்கும் மக்கள் பிரிவினரும், சரியான தலைமைத்துவம் இன்றியும், ஸ்தாபன பலமின்றியும், ஐக்கியத்தை இழந்தும், சிதைந்து சின்னாபின்னப்பட்டுப் போயும் உள்ளனர். ஆனால் இந்த நிலை என்றென்றைக்கும் தொடரப் போவதில்லை.

வரலாறு ஒரே பாதையில் தொடர்ந்தும் பயணிப்பதில்லை என்பதை, உலக வரலாறு திரும்பத் திரும்ப நிரூபித்து வந்துள்ளது.

(இக்கட்டுரை முதலில் லேக்ஹவுஸ் வெளியீடான ‘அமுது’ சஞ்சிகையில் ஆகஸ்ட் 2000ல் வெளியானது. இக்கட்டுரையை எழுதிய குருசேத்திரன் மேற்கொண்ட சிறு திருத்தங்களுடன், நன்றியுடன் இங்கு மீள் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.)

*

# பாலஸ்தீனர்களும் இஸ்ரேலியர்களும்
## இணைந்து வாழும் புதிய நாடு உருவாக்கப்பட வேண்டும்

**காவலூர் பாலன்**

1948 டிசம்பர் 11ல் ஐ.நா. பொதுச்சபையில் நிறைவேற்றப்பட்ட 194 இலக்கத் தீர்மானத்தின்படி, அவ்வாறு திரும்பி வந்து குடியேற விரும்பும் அகதிகள் தங்கள் வீடுகளில் தம் அயலவருடன் சமாதானமாக வாழ விரும்பும் பட்சத்தில், அவ்வாறு வாழ அனுமதிக்கப்பட வேண்டும். அவ்வாறு திரும்பி வர விரும்பாதவர்களுக்கு அவர்களது சொத்தின் பெறுமதிக்கு ஏற்ப நஸ்டஈடு வழங்கப்பட வேண்டும். இத்தீர்மானம் ஐ.நா.சபையில் மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்ட போதிலும், இன்றுவரை 6 மில்லியன் (60 லட்சம்) பாலஸ்தீன அகதிகள் மிக மோசமான வறுமை நிலையில் லெபனான், சிரியா, ஜோர்தான் போன்ற அயல்நாடுகளிலும், ஆக்கிரமிக்கப்பட்ட எல்லைப்புற பாலஸ்தீனத்திலுள்ள அகதி முகாம்களிலும் வாழ்கிறார்கள்.

இன்று இஸ்ரேலில் வாழும் 12 லட்சம் அராபிய இஸ்ரேலியர்களில், இரண்டரை லட்சம் பேர் உள்நாட்டிலேயே அகதிகளாகவுள்ளனர். இவர்கள் பாலஸ்தீன முஸ்லீம்களும் கிறிஸ்தவர்களுமாகும். 'இஸ்ரேலிய நில அதிகாரசபை' (ILA), 'யூத தேசிய நிதியம்' (JNF) என்ற இரு அமைப்புகளும் சேர்ந்து, இஸ்ரேலின் 93 வீதமான நிலத்தைக் கட்டுப்படுத்துகின்றன. அந்த நிலங்களில் வாழவோ, அவற்றைக் குத்தகைக்குப் பெறவோ, அங்கு வாழும் பலஸ்தீனர்களுக்கோ அல்லது கிறிஸ்தவர்களுக்கோ உரிமை இல்லை.

### 1967 யுத்தமும் அதன் பின்பும்

இஸ்ரேல் 1967 யூன் மாதம் நடாத்திய இரண்டாவது 6 நாள் ஆக்கிரமிப்புப் போரில், தனது அயல்நாடுகளின் சில பகுதிகளையும் ஆக்கிரமித்துக் கொண்டது. இதில் சினாய், காஸா, மேற்குக்கரை, கிழக்கு ஜெருசலம் என்பனவற்றுடன், சிரியாவின் கோலான் குன்றுப் பகுதியும் அடங்கும். இதன்போது, மேற்குக்கரையில் இருந்து மாத்திரம் 3 லட்சம் பாலஸ்தீனர்கள் ஜோர்தான் நாட்டுக்குள் விரட்டப்பட்டனர். அப்போது பாலஸ்தீனக் கிராமங்களான Imwas, Yalu, Beit, Nuba என்பன திட்டமிட்ட முறையில் டைனமைற் வைத்தும், புல்டோசர்களாலும் முற்றாகத் தகர்த்தெறியப்பட்டன.




அன்று இக்கொடூர நடவடிக்கைக்குத் தலைமைதாங்கியவர், அன்றைய இஸ்ரேலிய இராணுவ அதிகாரியும், பின்னர் இஸ்ரேலியப் பிரதமருமாக விளங்கிய ஜிற்ஸாக் ராபின் (Yitzhak Rabin) ஆகும்.

1979ல் எகிப்துடன் இஸ்ரேல் செய்துகொண்ட சமாதான ஒப்பந்தத்தின் அடிப்படையில், சினாய் தீபகற்பம் திரும்பவும் எகிப்திடம் வழங்கப்பட்டுவிட்டது. ஆனால் பாலஸ்தீனத்திலும் சிரியாவிலும் மேற்கொண்ட அநீதியான, சர்வதேசச் சட்டங்களுக்குப் புறம்பான தொடர்ச்சியான ஆக்கிரமிப்பு, 43 வருடங்களின் பின்னரும் ஐ.நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானத்திற்கு எதிராகத் தொடர்கின்றது.

இன்றைய எமது அவதானிப்பின்படி, 3 மில்லியன் பாலஸ்தீனியர்கள் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பின் கீழுள்ள பலஸ்தீனப் பகுதிகளில் மிக மோசமான அடக்குமுறையின் கீழ் அடிமைகளாக வாழ்கின்றனர். இதில் மிக மிக மோசமான நடவடிக்கையாக ஆக்கிரமிக்கப்பட்ட கிழக்கு ஜெருசலமும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளும் இஸ்ரேலுடன் இணைக்கப்பட்டுள்ளன. இவை யாவும் ஐ.நா பாதுகாப்பு சபையின் தீர்மானத்திற்கு எதிரானதாகும். மேலும் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் வாழும் பாலஸ்தீனியர்களின் பல

மனிதநேய நடவடிக்கைகள், ஆக்கிரமிப்பாளனால் முற்றாக மறுக்கப்பட்டுள்ளன. இவர்கள் தங்கள் மத வழிபாட்டுத் தலங்களுக்கோ அல்லது சுகாதார, கல்வி நிலையங்களுக்கோ கூட சென்றுவர முடியாதவாறு தடுக்கப்பட்டுள்ளனர். மேலும் இஸ்ரேலினால் சூறையாடப்பட்ட பாலஸ்தீனத்தின் மேற்குக்கரைப் பகுதியைச் சுற்றி (சீனப் பெரும் சுவர் போல) பல மைல்கள் நீண்டு செல்லும் தடைச்சுவர்கள் எழுப்பப்பட்டுள்ளன. இந்தப் பாரிய தடைச்சுவர் பாலஸ்தீன மக்கள் தமது அன்றாட அத்தியாவசியத் தேவைகளைக் கூடச் செய்ய முடியாதவாறு தடுக்கின்றது.

### மோதலுக்கு முடிவாக

இதுவரை இஸ்ரேலிய மற்றும் பாலஸ்தீன தலைவர்களுக்கடையே, சர்வதேச ஏகாதிபத்திய சக்திகளின் மேற்பார்வையில், தொடர்ச்சியாக நடைபெற்று வந்த காம்ப் டேவிட் மற்றும் மட்றிட் பேச்சுவார்த்தைகளோ அல்லது ஒஸ்லோ ஒப்பந்தமோ அல்லது ரோட் மாப்போ (Road Map) அல்லது அனாபொலிஸ் பேச்சுவார்த்தையோ, எதையுமே இஸ்ரேலிய சியோனிசவாதிகள் நடைமுறைப்படுத்தத் தயாரில்லை என்பதே நிலைமையாகும்.

ஆனால் அதற்கு மாறாகத் தொடர்ந்தும் பாலஸ்தீன மக்களின் நிலங்களை சியோனிசவாதிகள் சூறையாடிக்கொண்டே இருக்கிறார்கள். முக்கியமாக இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயம் என்னவெனில், இவையெல்லாவற்றையும் மறுத்துக் கொண்டே இஸ்ரேல், நோர்வேயின் மத்தியஸ்தத்தின் கீழ் செய்த உடன்படிக்கையின்படி இஸ்ரேலின் பாதுகாப்பை பேணவேண்டிய நிர்ப்பந்தத்திற்குள் பாலஸ்தீன அதிகாரசபை சிக்க வைக்கப்பட்டுள்ளது.

இந்த இடத்தில்தான், ஏகாதிபத்தியத்தின் கையாளான நோர்வேயின் மூலம், அவர்களது அடிவருடிகளான ஐக்கிய தேசியக்கட்சி அரசுக்கும், பாசிசப் புலிகளுக்கும் இடையிலான ஒப்பந்தத்தைத் தூக்கி எறிந்து, ஏகாதிபத்திய சார்பு – மேற்குலகு சார்ந்த மாபியாப் புலித்தலைமையை முற்றாக ஒழித்துக்கட்டிய, தற்போதைய தேசபக்த இலங்கையின் அரச தலைமையை நாம் பாராட்ட வேண்டியுள்ளது. அத்துடன் அது தொடர்ந்தும் ஏகாதிபத்தியத்தின் சதி, சூழ்ச்சி, சீர்குலைவு நடவடிக்கைகளுக்கு எதிராகப் போராடுவதையும் ஆதரிக்க வேண்டியுள்ளது.

இஸ்ரேல் – பாலஸ்தீனம் என்ற இரு நாடுகளின் உருவாக்கமே, பாலஸ்தீனப் பிரச்சினைக்குத் தீர்வு என்று கூறப்பட்டாலும், அதைக்கூட இஸ்ரேல் மதித்து நடக்கப் போவதில்லை என்பதே உண்மையான நிலவரமாகும். எனவே பழையபடி இஸ்ரேல் என்ற நாடு உலக வரைபடத்திலிருந்து இல்லாதொழிக்கப்பட்டு, பாலஸ்தீனர்களும் யூதர்களும் சமமாகவும், ஒற்றுமையாகவும் வாழும் ஒரு புதிய நாடு உருவாக்கப்படும் வரை, இந்தப் பிரச்சினை ஒருபோதும் தீரப்போவதில்லை.

(இக்கட்டுரை ஏழாவது இதழில் வெளிவந்த 'பல இலட்சம் யூதர்கள் இஸ்ரேலில் இருந்து வெளியேறி வருகின்றனர்' என்ற கட்டுரையின் இறுதிப்பாகம்.)
*

---

'ஜனநாயக பூர்ஷ்வாக்கள் புரட்சி உடனடியாக முடிவுக்கு வரவேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆனால் புரட்சி நிரந்தமாக இருக்கவேண்டும் என்பது நம் நிலைப்பாடு. பாட்டாளி வர்க்கம் ஆதிக்கத்தில் இருந்தும் பின்தங்கிய நிலையில் இருந்தும் முற்றிலுமாக விடுபடும்வரை புரட்சி தொடரப்படவேண்டும். பாட்டாளி வர்க்கம் அரசு அதிகாரத்தைக் கைப்பற்றும் வரை புரட்சி தொடரப்படவேண்டும். ஆதிக்கம் செலுத்தும் அத்தனை நாடுகளிலும் உள்ள பாட்டாளி மக்கள் ஒன்றிணையும் வரை, அவர்களுக்கு இடையிலான போட்டிகள் மறைந்துபோகும் வரை, உற்பத்தி சக்திகள் பாட்டாளி வர்க்கத்தின் கரங்களில் திரண்டு வரும் வரை புரட்சி தொடரப்படவேண்டும்.'

**– கம்யூனிஸ்ட் அறிக்கை**

---

### புதிய ரைன்

ஜூன் 1, 1848 அன்று புதிய ரைன் எனும் பத்திரிகையை மார்க்சும் எங்கெல்சும் தொடங்கினர். இந்தப் பத்திரிகையின் முதல் இதழ், ஜனநாயக பத்திரிகை என்னும் அடையாளத்துடன் வெளிவந்தது. பாட்டாளி வர்க்கத்தின் நம்பிக்கையைப் பெறுவதற்கும் அவர்களை இயக்கத்தின் பால் ஈர்க்கவும் எடுக்கப்பட்ட முயற்சி இது. பெயரளவில் ஜனநாயக முத்திரை பதிக்கப்பட்டிருந்தாலும் உள்ளடக்கம் முற்போக்கானதாகவும் புரட்சிகரமானதாகவும் அமைந்திருந்தது புதிய ரைன் பத்திரிகை ஓராண்டு மட்டுமே உயிர் வாழ்ந்தது. இந்த ஓராண்டில் எங்கெல்ஸ் நூற்றுக்கும் அதிகமான கட்டுரைகளையும் அறிக்கைகளையும் எழுதி பதிப்பித்தார். 'பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர இதழாக' புதிய ரைன் செயல்பட்டது என்று லெனின் பின்னர் குறிப்பிட்டார்.

# சென்னையில் அப்பாவி இலங்கை யாத்திரீகள் மீது
## சீமான் கட்சியினர் காடைத்தனம்!

இந்தியாவுக்கு யாத்திரை மேற்கொண்டுவிட்டு, இலங்கை திரும்புவதற்காக தமிழகத் தலைநகர் சென்னையில் ஹோட்டல்களில் தங்கியிருந்த சிங்கள பயணிகள் மீது, சீமான் நடாத்தி வரும் 'நாம் தமிழர் இயக்கத்தை'ச் சேர்ந்த காடையர் கும்பலொன்று தாக்குதல் நடாத்தியதுடன், அவர்களது உடைமைகளையும் சேதப்படுத்தியுள்ளது.

வை.கோபாலசாமி, ப.நெடுமாறன், டாக்டர் ராமதாஸ், தொல்.திருமாவளவன், சுப. வீரபாண்டியன் போல, சீமானும் தீவிரமான சிங்கள எதிர்ப்பாளர் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். ஆனால் அதற்காக இவ்வாறான காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கைகளில் ஈடுபடுவார் என அவரது ஆதரவாளர்கள் கூட எதிர்பார்த்திருக்கமாட்டார்கள்.

'அடித்தால் திருப்பி அடிப்பேன்' என்பது சீமானின் வீராவேச வசனம். அப்படியானால் இங்கு அந்த சிங்கள யாத்திரீகர்கள் அடித்தா சீமான் அவர்கள் மீது தனது காடையர் கும்பல் மூலம் தாக்குதல் நடாத்தியுள்ளார். ஒரு கதைக்காக, இலங்கை அரசாங்கம் அங்குள்ள தமிழ் மக்களை பாரபட்சமாக நடாத்துவதால்தான், சிங்கள மக்களைத் தான் தாக்கியதாக சீமான் நியாயம் பேசுவாராக இருந்தால், இலங்கை அரசாங்கத்துக்கு சகல வழிகளிலும் உதவி வரும் இந்திய அரசுத் தலைவர்களையல்லவா சீமான் முதலில் தாக்க வேண்டும்.


இப்படித்தான் புலிகளும் முதலில் சிங்களப் பேரினவாத அரசுக்கெதிராக என்று சொல்லிப் போராட்டத்தை ஆரம்பித்து, பின்னர் சாதாரண சிங்கள மக்களைத் தாக்கி, அதன் பின்னர் முஸ்லீம் மக்களைத் தாக்கி, அவர்களைப் அவர்களது பாரம்பரிய வாழ்விடங்களிலிருந்து துரத்தி, கடைசியில் தமிழ் மக்கள் மீதே கைவைத்து, இறுதியாக முள்ளிவாய்க்காலில் இறுதியும் அறுதியுமாக அழிந்து போனார்கள். மக்கள் மீது கைவைப்பவர்கள் இறுதியில் இவ்வாறான முடிவைத்தான் அடைவார்கள் என்பதை, சீமான் போன்றவர்கள் மறந்துவிடுவது தான், அவர்கள் முட்டாள்தனமானதும், கோழைத்தனமானதுமான செயல்களில் மீண்டும் மீண்டும் ஈடுபடுவதற்குக் காரணம்.

கருணாநிதியின் ஆட்சியின் போது இல்லாத துணிச்சல், சீமான் போன்றவர்களுக்கு இப்பொழுது ஏற்பட்டிருப்பதற்குக் காரணம், ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கும் முதலமைச்சர் ஜெயலலிதாவும், அவரது கட்சியும் திடீரென முன்னொருபோதும் இல்லாத வகையில் இலங்கைக்கு எதிராக மேற்கொண்டிருக்கும் தீவிர எதிர்நிலைப்பாடுதான். ஜெயலலிதாவின் இந்தத் திடீர பல்டிக்குக் காரணம், அரசியல் லாப நோக்கிலான சந்தர்ப்பவாதம் மட்டுமின்றி, அவர் சில வெளிச் சக்திகள் இலங்கைக்கு எதிராக மேற்கொண்டிருக்கும் வேலைத்திட்டத்துடன் பின்னிப் பிணைக்கப்பட்டிருப்பதும்தான்.

இதில் ஏற்கெனவே சீரழிந்து போன இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், புதிதாகச் சீரழியத் தொடங்கியிருக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் அணி சேர்ந்திருக்கையில், சீமான் போன்றவர்கள், தமிழக அரசியலிலும் இதைவிடவும் மோசமான வன்முறைச் சம்பவங்களில் எதிர்காலத்தில் ஈடுபடக்கூடிய வாய்ப்பு நிச்சயமாக உருவாகும்.

கருணாநிதியின் ஆட்சியில் சட்டம் – ஒழுங்கு சீர்குலைந்து விட்டது என்று சொல்லி ஆட்சிக்கு வந்த ஜெயலலிதா, இத்தகைய காடைத்தனங்களை தொடர்ந்தும் அனுமதித்தால், அவரது முந்திய ஆட்சிகளின் போது நடாத்தப்பட்ட அடாவடித்தனங்களுக்காக, அவரை மக்கள் வீட்டுக்கு அனுப்பியது போல, திரும்பவும் அவரை ஆட்சியிலிருந்து மக்கள் விரட்டத் தயங்கமாட்டார்கள் எனபதை, அவர் உணர வேண்டும். இந்திய – இலங்கை உறவுகளைச் சீர்குலைப்பதை நோக்கமாகக் கொண்டு, சில வெளிநாட்டுச் சக்திகளின் தூண்டுதலில் மேற்கொள்ளப்படும் இத்தகைய செயல்களை, இந்திய மத்திய அரசும் கைகட்டிப் பார்த்துக் கொண்டிராமல் உடனடியாகக் கட்டுப்படுத்த வேண்டும்.

**- சேசாஸ்திரி**




அமெரிக்காவில் Standard and Poor's என்ற தர நிறுவனம் (Rating Agency) செய்துள்ள, கடன் வாங்கும் வலுவைக் குறைத்தல் (Debt Downgrade) என்பதின் உண்மையான தாற்பரியம் என்ன?

சாதாரணமாக இதை நோக்கினால், ஒரு தர நிறுவனம் கடன் வாங்கும் வலுவைக் குறைத்தல் என்பது, ஒரு நாடு தான் வாங்கிய கடனைத் திரும்பச் செலுத்தும் வலு, இப்பொழுது முன்னரிலும் பார்க்கக் குறைந்துள்ளது என்பதே. அதாவது அமெரிக்காவின் கடன் வாங்கும் வலு, AAA (Credit Rating) என்ற தரத்திலிருந்து தற்போது Standard and Poor's தர நிறுவனத்தால் AA+ ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்கா எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடி உலகம் முழுவதையும் பாதிக்கும்!

**- கதிரவன்**

இதை மேலெழுந்தவாரியாகப் பார்க்கும் போது சாதாரணமாகத் தோன்றினாலும், இதனால் விளையக்கூடிய பயங்கரமான பொருளாதாரத் தாக்கமோ, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய யூனியன் நாடுகளை மட்டுமல்ல, முழு உலகத்தின் பொருளாதார நடவடிக்கைகளையும் முற்றுமுழுதாகச் சீர்குலைத்து செயலிழக்கச் செய்துவிடக்கூடிய பேராபத்துண்டு.

இதனால்தான், Gerald Celente என்ற பொருளாதார நிபுணர் பின்வருமாறு கூறுகிறார்: "S & P's Downgrade of US Treasury's Credit Rating". இந்த நடவடிக்கையானது, அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் தற்போது அதிகாரத்திலுள்ள (முதலாளித்துவ – ஏகாதிபத்திய) அரசியல் அமைப்பின் (Political System) மேலான நம்பிக்கையீனத்தையே பிரதிபலிக்கின்றது.

S&P's இந்தத் தரம் தாழ்த்தலை (Down Grading) ஏன் செய்ய வேண்டி வந்ததென்பதைப் பற்றி விளக்கும் போது, இது உண்மையில் பொருளாதாரப் பின்னடைவால் ஏற்பட்டது அல்ல, அரசியல் பின்னடைவால் உண்டாகியதாகும் என்பது தெரிய வருகின்றது. இதை இன்னும் சிறப்பாகவும் சுருக்கமாகவும் சொல்வதானால், முதலாளித்துவ – ஏகாதிபத்தியக் கட்டமைப்பு, மாமேதை மாக்ஸ் கூறியது போல, முற்றுமுழுதாகச் செயலிழக்கும் காலம் வெகுதூரத்தில் இல்லையென்பதாகும்.

S&P's செய்துள்ள அமெரிக்காவின் கடன் வாங்கும் வலு மீதான தர இறக்கம், பொருளாதாரத் தாக்கத்திலும் பார்க்க, உளவியல் தாக்கத்தையே மிகப் பெரியளவில் ஏற்படுத்தியுள்ளது. பலர் இதை அமெரிக்காவின் வீழ்ச்சியை வெளிக் கொணருவதாகவே நோக்குகிறார்கள்.

உண்மையில் அமெரிக்காவிலும் பார்க்க, ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்த பல நாடுகள் மீளாக் கடன் சுமையில் சிக்கியுள்ளதுடன், அதன் காரணமாக அங்குள்ள அரசுகளுக்கெதிராக பல மக்கள் போராட்டங்களும் அந்நாடுகளில் வெடித்துக் கிளம்பியுள்ளன. உதாரணமாக கிரேக்கத்தில் (Greece) பல மாதங்களாக மக்கள் வேலையின்மை, கடன் சுமை, வாழ்வாதாரங்கள் இழப்பு என்பன காரணமாகத் தெருவில் இறங்கிப் போராடுகிறார்கள். அங்கு வேலை இல்லாத் திண்டாட்டம் 22 வீதத்திற்கும் அதிகமானதாகும். அதிலும் வேலையில்லாமல் திண்டாடுவோரில் பெரும்பான்மையானோர் இளைஞர்களாகும். இளைஞர்கள் என்றாலே புரட்சி செய்ய விரும்புபவர்கள் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

அமெரிக்காவின் வேலையற்றோர் தொகையும் கூட 9.1 வீதத்தைத் (அதன் சனத்தொகையில் ஏறத்தாழ 3 கோடி) தாண்டியுள்ளது. அமெரிக்காவும், ஐரோப்பிய யூனியன் நாடுகளான கிரீஸ், இத்தாலி, ஸ்பெயின், போர்த்துக்கல் மற்றும் அயர்லாந்து என்பனவும், இன்று கடன் சுமையால் மிக அதிகமாகத் தத்தளிக்கின்ற நாடுகளாகும். உதாரணத்திற்கு அவை சிலவற்றின் கடன் விபரம்: அமெரிக்கா – 14.3 றில்லியன் (Trillion) டொலர்கள், இத்தாலி – 1.4 றில்லியன் டொலர்கள், ஸ்பெயின் – 700 பில்லியன் (Billion) டொலர்கள். மேலும் அண்மையில் இரு கிழமைகளில் கிட்டத்தட்ட

உலகளாவிய சேமிப்பில் (Global Stock) ஏற்பட்ட ஏற்பட்ட வீழ்ச்சி 7 றில்லியன் (Trillion) டொலர்களாகும்.

அமெரிக்காவின் இந்தக் கடன் பிரச்சினைக்குரிய தீர்வில், குடியரசுக் கட்சிக்கும், ஜனாதிபதி பராக் ஒபாமாவின் ஜனநாயகக் கட்சிக்குமான இழுபறியில், மிகவும் மோசமான பிற்போக்குக் கட்சியான குடியரசுக் கட்சி, பிரச்சினைக்குத் தீர்வாக 4 றில்லியன் (Trillion) செலவுக் குறைப்பு ஆலோசனையை முன்வைத்துள்ளது. இதன் மூலம் கல்வி, வீதி அபிவிருத்தி, பாலங்கள் கட்டுவது, சாக்கடைத் துப்பரவு, ஆராய்ச்சி உட்பட அதி முக்கியமான சேவைகள் முற்றுமுழுதாகக் கைவிடப்படலாம். ஆனால் ஒபாமா அரசு 2.4 றில்லியன் குறைப்பை மட்டுமே செய்துள்ளது. இதனால் ஏற்படும் பின் விளைவுகளைச் சற்றுப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில், ஐரோப்பிய ஏகாதிபத்தியத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்க ஏகாதிபத்தியம் எதிர்நோக்கும் சவாலிலிருந்து வெளிவரத் தன்னால் இயன்றளவு முயற்சிக்கின்றது. ஆனால் அமெரிக்காவோ, ஐரோப்பிய யூனியன் நாடுகளின் பொருளாதார நெருக்கடிகளைத் தனக்குச் சாதகமாக்க முயற்சிக்கின்றது. இன்றைய காலகட்டத்தில் அமெரிக்காவின் உலக மேலாதிக்கம் என்பது, இராணுவ ரீதியானது என்பதை விட, பொருளாதார ரீதியானது என்பதே பொருத்தமானதாகும்.

எனவே, இது நீண்ட காலத்தில் அல்லது விரைவில் ஏகாதிபத்தியங்களுக்கிடையிலான நாய்ச் சண்டையாக மாறி, உலக யுத்தமாக மாறக்கூடிய அபாயமும் உண்டு. அண்மையில் பிரிட்டனில் இளைஞர்கள், மாணவர்களின் பல நாட்கள் நீடித்த போராட்டம், வருங்கால மக்கள் எழுச்சியை கட்டியம் கூறிய ஒரு முன் அறைகூவலாகும்.


**இக்கட்டுரைக்கான ஆதாரங்களை வழங்கிய தகவல் மூலங்கள்:**

1. http://topics.bloomborg.com/u.s-debt
2. www.globalresearch.ca/index.php?/
3. Toronto Star
4. http://vanguard.net/au/2008/pdf%20files/aug11/page%203.pdf


# சுகி சிவத்தின் உண்மையை உரைத்த சொற்பொழிவு!

சுகி சிவம் என்பவர், தமிழகத்தின் பிரபலமான முன்னணி ஆன்மீகச் சொற்பொழிவாளர்களில் ஒருவர். அண்மையில் அவர் இலங்கைக்கு விஜயம் செய்து, யாழ்ப்பாணமும் சென்றதுடன், அங்குள்ள நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்துக்கும் சென்று வழிபட்டு வந்துள்ளார். அவர் தமிழகம் திரும்பிய பின்னர், தமிழ்நாட்டின் 'சன்' தொலைக்காட்சியில், தனது யாழ்ப்பாண விஜயம் சம்பந்தமாக அருமையான சொற்பொழிவொன்றை நிகழ்த்தியுள்ளார்.

அதில் அவர், யாழ்ப்பாணத்தின் இன்றைய உண்மையான நிலையை யதார்த்தபூர்வமாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளதுடன், ஈழத் தமிழர்களுக்காகத் தமிழகத்தில் கூச்சல் போட்டுச் சன்னதம் ஆடும் பிழைப்புவாத, வெற்றுவேட்டு அரசியல்வாதிகளின் போலித்தனங்களை, மோசடிகளைத் தோலுரித்துக் காட்டியுமுள்ளார். அத்துடன் புலம்பெயர் நாடுகளில் வாழும் ஈழத் தமிழர்கள், தாயகத் தமிழர்களுக்காக வடிக்கும் நீலிக் கண்ணீரையும் கேள்விக்குள்ளாக்கியுள்ளார்.

உண்மையை உரைத்ததிற்காக, தமிழ் தேசியவாதிகள் அவர் மீது எப்பொழுது 'துரோகி' முத்திரை குத்துகிறார்களோ தெரியாது. அவரது பேச்சு, சில தமிழ் இணையத் தளங்களில் ஒலி வடிவில் கேட்கக்கூடியதாக வெளியிடப்பட்டுள்ளது.
*

## ✷ தவறுக்கு வருந்துகிறோம்!

கடந்த இதழில் (இதழ் 7) இசைப்பிரியன் எழுதிய 'திரை இசையில் கர்நாடக சங்கீதத்தின் செல்வாக்கு' என்ற கட்டுரையில் மூன்றாவது பந்தியில் சில வசனங்கள் விடுபட்டுப்போயுள்ளன.


அவரது மனைவி சுந்தராம்பாளின் "பழனியப்பா ஞானப்பழம் நீயப்பா"... என ஆரம்பிக்கும் வசனம், பி.சுசீலாவின் தில்லானா மோகனாம்பாளில் இடம்பெற்ற "மறைந்திருந்து பார்க்கும் மர்மம் என்ன?" போன்ற பாடல்கள் ஒருகலக்கு கலக்கியதை நாம் அறிவோம். பின்னைய இரண்டு பாடல்களும் சண்முகப்பிரியா இராகத்தில் அமைய, காயாதகானகத்தே கரகரப்பிரியாவில் அமைந்தது.... என முடிவுற வேண்டும்.
✷

சீனாவின் தலைநகர் பெய்ஜிங்கில் 1989 ஜூன் 04ந் திகதியன்று போராட்டத்தில் ஈடுபட்டிருந்த ஆயிரக்கணக்கான மாணவர்களை, சீன இராணுவம் சுட்டுக் கொன்றதாக கடந்த 20 வருடங்களுக்கும் மேலாக மேற்கு நாட்டு ஊடகங்கள் தொடர்ந்து பிரச்சாரம் செய்து வந்தன. அந்தப் பிரச்சாரம் பொய் என்பதை, 'விக்கிலீக்ஸ்' சமீபத்தில் அம்பலமாக்கியிருக்கிறது. சீனாவிலுள்ள அமெரிக்கத் தூதரகம் அனுப்பிய கேபிள்களை ஆதாரமாகக் கொண்டு, விக்கிலீக்ஸ் இதைத் தெரிவித்திருக்கிறது. அதன் விபரங்கள் வருமாறு:

கிளர்ச்சி செய்து வந்த மாணவர்கள் தலைநகர் பெய்ஜிங்கின் மையப்பகுதியை வாரக்கணக்கில் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்கள். வீதிகளுக்குக் குறுக்கே பேரூந்துகளை நிறுத்தி, போக்குவரத்து நடைபெறாமல் தடைசெய்திருந்தனர். அந்தத் தடைகளை யாரும் அகற்றிவிடக்கூடாது என்பதற்காக, ஆட்கள் மாறி மாறிக் காவலுக்கு இருந்தனர். தியன்னான்மென் சதுக்கத்தில் ஆர்ப்பாட்டம் செய்த மூவாயிரம் மாணவர்கள் காவல்துறையோ அல்லது இராணுவமோ உள்ளே நுழைய முடியாது என்ற நம்பிக்கையில் இருந்தனர்.

# சீனாவின் தியன்னான்மென் 'படுகொலைகள்' பொய்ப்பிரச்சாரம் என்பதை விக்கிலீக்ஸ் அம்பலப்படுத்தியது!

ஆனால், அவர்களது எதிர்பார்ப்புகளை மீறி காவல்துறையும் இராணுவமும் தியன்னான்மென் சதுக்கத்திற்குள் நுழைந்துவிட்டன. மாணவர்களைக் கலைப்பதற்காக கண்ணீர் புகைக்குண்டுகளை மட்டுமே இராணுவம் கொண்டு வந்தது. ஆனால் அவர்கள் நடவடிக்கை எடுப்பதற்கு முன்பாகவே மாணவர்கள் கலைந்து சென்றுவிட்டனர். இதை ஆர்ப்பாட்டத்துக்குத் தலைமைதாங்கியவரும், சீனாவை வெறுப்பேற்றுவதற்காக நோபல் பரிசு வழங்கப்பட்டவருமான லியு சியா வோபோ உறுதிப்படுத்தினார். அவ்வாறு அமைதியாகக் கலைந்து செல்லுமாறு அவரும் மாணவர்களிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார். அதை சிலி நாட்டுத் தூதுவரும் உறுதிப்படுத்துகிறார். மாணவர்கள் அனைவரும் அமைதியாக சதுக்கத்தின் தென்கிழக்கு மூலை வழியாக வெளியேறினர் என்கிறார் அவர்.



இந்தச் சம்பவம் நடந்தபோது, பிபிசி செய்தி நிறுவனத்தின் செய்தியாளராகப் பணியாற்றிய ஜேம்ஸ் மில்ஸ், 2009ம் ஆண்டில் தனது செய்தி தவறானது என்பதை ஒப்புக் கொண்டிருக்கிறார்.

''தியன்னான்மென் சதுக்கத்தில் படுகொலை நடக்கவில்லை. உள்ளே நுழைந்த இராணுவத்துடன் பேச்சுவார்த்தை நடந்தது. அதற்குப்பிறகு ஆர்ப்பாட்டக்காரர்கள் அமைதியாகக் கலைந்து சென்றனர்'' என்ற அவர், தியன்னான்மென் சதுக்கத்திலிருந்து மூன்று மைல் தொலைவில் நடந்த மற்றொரு சம்பவத்தில்தான் இராணுவத்தினர் துப்பாக்கியால் சுட நேர்ந்தது என்கிறார்.

தியன்னான்மென் சம்பவத்தை நேரில் பார்த்த சிலி நாட்டுத் தூதுவர், சதுக்கத்தில் குழுமியிருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது இராணுவம் சுடவில்லை என்கிறார். மற்றொரு நாட்டின் தூதரும் இதை உறுதிப்படுத்தினார். அவர் சதுக்கத்தின் செஞ்சிலுவைச் சங்கக் கூடாரத்தில் நின்று பார்த்திருக்கிறார். இது குறித்து கருத்து தெரிவித்த அவர், திடீரென்று இராணுவம் தோன்றியபோது நான் பயந்தேன். ஆனால் அங்கு துப்பாக்கிச் சூடு எதுவும் நடக்கவில்லை. அப்போதைய சீனக் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கைகளும், உட்கட்சி சுற்றுக்கு விடப்பட்ட குறிப்புகளும் இத்தகைய செய்திகளைத்தான் கூறுகின்றன.

இவ்வாறு விக்கிலீக்ஸ் உண்மைகளை அம்பலத்துக்குக் கொண்டு வந்துள்ளது. இந்த விபரங்களை 2011 ஜூன் 04ந் திகதிய 'டெலிகிராப்' பத்திரிகை வெளியிட்டுள்ளது.

ஏகாதிபத்திய செய்தி ஊடகங்கள், தங்களுக்குப் பிடிக்காத நாடுகளைப் பற்றி பொய்ப்பிரச்சாரங்களை மேற்கொள்வது ஒரு புதிய விடயமல்ல. இந்தப் பின்னணியில், இலங்கை பற்றி சனல் - 4 வெளியிட்ட படத்தையும் நோக்குவது அவசியம்.

*



கடந்த 3 தசாப்த காலங்களாக இலங்கையில் அமுலில் இருந்த அவசரகாலச் சட்டம் இனி நடைமுறைப்படுத்தப்பட மாட்டாது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச 25.08.2011 இல் நாடாளுமன்றத்தில் வைத்து அறிவித்துள்ளார்.

இதுதொடர்பான பிரேரணை ஒன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து விசேட உரையொன்றை ஆற்றிய போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அத்துடன், அவசரகால சட்டம் நீடிப்பு தொடர்பான பிரேரணை எதிர்காலத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படாது என்றும் நாட்டில் முழுமையாக ஜனநாயகம் ஏற்படுத்தப்பட்டுள்ள நிலையில், அவசரகாலச் சட்டம் அவசியமற்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கையில் அவசரகாலச்சட்டம் நீக்கப்பட்டது!

இதற்கு முழு காரணமாக இருந்து மனிதாபிமான நடவடிக்கைகளை மேற்கொண்ட படையினர் அதன்போது, அர்ப்பணிப்பை மேற்கொண்ட பொதுமக்கள் அனைவருக்கும் அவர் நன்றி தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டத்தை நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்தமை குறித்து பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு நன்றி தெரிவித்துள்ளார். அவசரகாலச் சட்டம் நீக்க நடவடிக்கை எடுத்தமையானது நாட்டில் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்கான சிறந்த நடவடிக்னையென ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

1971 ம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட அவசரகாலச் சட்டம் பின்னர் நீக்கப்பட்டு, மீண்டும் 2005ம் ஆண்டு முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொலை செய்யப்பட்டதன் பின்னர் அமுல்படுத்தப்பட்டது. தற்போதைய நிலையில் யுத்தம் முடிவடைந்து இரண்டு வருடங்கள் கடந்து விட்டதனாலும், இலங்கையில் புலிகள் ஒழிக்கப்பட்டு அவர்களின் செயற்பாடுகள் இடம்பெறாததினாலும் அவசரகால சட்டத்தை நீக்கும்படி அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட பல நாடுகள் தொடர்ச்சியாக இலங்கைக்கு அழுத்தங்களை கொடுத்து வந்தன.

அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டதை இலங்கையின் மதத்தலைவர்கள், கல்விமான்கள், அரசியல் பிரமுகர்கள் மற்றும் ஏனைய கட்சித் தலைவர்கள் வரவேற்றுள்ளனர். அதேநேரம், தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு இதன் மூலம் தகுந்த சூழல் உருவாகியுள்ளதாகவும், இதனை அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் அவர்கள் குறிப்பிட்டனர். இலங்கைக்கு எதிராக சர்வதேச அழுத்தம் மற்றும் குற்றச்சாட்டுக்களுக்கு ஜனாதிபதியின் இந்த நடவடிக்கை மூலம் பெரும் பின்னடைவு ஏற்படும் எனவும் அவர்கள் கருத்துத் தெரிவித்தனர்.
*

## ✷ ‘வானவில்’ கலந்தாய்வுக் கூட்டம்

‘வானவில்’ பற்றிய கலந்தாய்வுக் கூட்டமொன்று ஜுலை 17, 2011ல், கனடாவின் ஸ்காபரோ நகரிலுள்ள சிவிக் சென்ரர் குழுக் கூட்ட அறையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வானவில்லின் முதல் ஆறு இதழ்கள் பற்றி அதன் வாசகர்கள், எழுத்தாளர்கள், விநியோகஸ்தர்கள், நிதி உதவி செய்வோர், அபிமானிகள் கலந்துரையாடினர்.

மிகவும் உயிரோட்டத்துடன் நடைபெற்ற இக்கலந்துரையாடலில், தமிழ் சமூகத்தில் ஜனநாயக விழுமியங்களை மீள நிலைநாட்டுவதற்காக, கடந்த காலங்களில் அயராது பாடுபட்ட பலர் கலந்து கொண்டு மிகவும் ஆக்கபூர்வான கருத்துகளை முன்வைத்தனர். வானவில் இப்பொழுது கனடாவில் மட்டுமின்றி, அனைத்து புலம்பெயர் நாடுகளிலும், தாயகத்திலும் பரவலாக வாசிக்கப்படுவதால், அதனை மேலும் செழுமைப்படுத்துவதற்கான ஆலோசனைகளைப் பலர் எடுத்துக் கூறினர். கூட்ட முடிவில் வானவில் வளர்ச்சிக்கு சிலர் நிதி நன்கொடைகளையும் வழங்கினர்.

கூட்டத்துக்கு வானவில் பத்திரிகைக் குழுவைச் சேர்ந்த எஸ்.தருமராசன் தலைமை வகித்தார். ஆசிரியர் குழு சார்பாக சண்முகம் சுப்பிரமணியம் உரை நிகழ்த்தினார். ✷

முன்பக்கத்தொடர்ச்சி...
பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அவர்களே ஒப்புக் கொண்டிருந்தார்.

எனவே, கூட்டமைப்புக்கு தமிழ் மக்களின் பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதில் விருப்பம் இல்லை என்பதையே, சுமந்திரனின் பேட்டி கோடி காட்டி நிற்கிறது. அந்தப் பேட்டியின் போது சுமந்திரன் மேலும் கூறுகையில், அதிகாரப் பகிர்வு சம்பந்தமாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்த யோசனைகளை, அரச தரப்பு மறுப்பு ஏதுமில்லாமல் ஏற்றுக் கொண்டதாகவும் குறிப்பிட்டிருந்தார். அப்படியானால் கூட்டமைப்பு திடீரெனப் பேச்சுவார்த்தையை முறித்துக் கொள்ள வேண்டிய தேவை ஏன் ஏற்பட்டது?

தமிழ் கூட்டமைப்பு கூறுவது போல, பேச்சுவார்த்தையை நீண்டகாலத்துக்கு இழுத்துச் செல்வது ஏற்க முடியாததுதான். ஆனால் 60 ஆண்டுகளாக நீடிக்கும் ஒரு பிரச்சினைக்கு – அதுவும் அதற்காக 30 வருடங்கள் கொடுமையான போர் புரிந்த ஒரு பிரச்சினைக்கு – அதிலும் குறிப்பாக அரசுக்கு உள்ளேயும் வெளியேயும் சிங்களப் பேரினவாதம் வலுவாகவும், அதேபோல தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு உள்ளேயும் வெளியேயும் தமிழ் தேசிய வெறி வலுவாகவும் உள்ள ஒரு சூழலில், ஆற அமர இருந்து இரு தரப்பும் உட்கார்ந்து பேச வேண்டிய ஒரு பிரச்சினையை, ஆறு மாதங்களுக்கு மேல் பேச்சுவார்த்தையைத் தொடர முடியாது எனக் கூறி, கூட்டமைப்பு திடீரென முறித்துக் கொண்டது, மக்களுக்கு சந்தேகத்தைத்தான் ஏற்படுத்துகிறது.

இத்தகைய ஒரு சூழ்நிலையில், பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் இரு தரப்புக்கும் உண்மையில் அக்கறை இருக்குமாக இருந்தால், பொறுமையுடனும், விட்டுக் கொடுப்புடனும் செயல்பட்டிருக்க வேண்டும். வழமையாக பேச்சுவார்த்தைகளில் அதிகாரத் தரப்புத்தான் முரண்டு பிடிப்பது வழக்கம். ஆனால் இங்கு தமிழ் கூட்டமைப்புதான் முரண்டு பிடித்து 'வெண்ணெய் திரண்டு வரும்போது தாழியை உடைத்தது போல்' பேச்சுவார்த்தையை முறித்துக் கொண்டுள்ளது. இதற்கான காரணம் ஒன்றும், விளங்கிக் கொள்ள முடியாத புதிரல்ல.

ஏகாதிபத்திய சக்திகளின் இலங்கைக்கு எதிரான நிகழ்ச்சி நிரலுக்காகவும், புலம்பெயர் புலித் தமிழர்களின் வேண்டுகோளுக்காகவும் தான், தமிழ் கூட்டமைப்பு பேச்சுவார்த்தையை முறித்தது என்ற அபிப்பிராயமே பொதுவாக மக்கள் மத்தியில் நிலவுகிறது. நிலைமை அதுவாகத்தான் இருக்குமானால், இன்னும் ஒரு முப்பது வருடங்களுக்கு, திரும்பவும் அழிவை எதிர்நோக்கப் போவது கூட்டமைப்பினரல்ல. சாதாரண தமிழ் மக்கள்தான். கூட்டமைப்பினருக்குத்தான் முன்னைய காலங்களைப் போல, ஓடித் தப்புவதற்கு எத்தனையோ நாடுகளும், வீ.ஐ.பி கடவுச் சீட்டுகளும் இருக்கின்றனவே!

உண்மையில் இப்பொழுதுதான், முன்பொருமுறை தமிழரசுக் கட்சித் தலைவர் எஸ்.ஜே.வீ.செல்வநாயகம் சொன்ன, 'கடவுள்தான் தமிழ் மக்களைக் காப்பாற்ற வேண்டும்' என்ற வார்த்தைகள் தமிழ் மக்களுக்குப் பொருந்தி வருகின்றன. கூட்டமைப்பு தலைமை தமிழ் மக்களைக் காப்பாற்றாது என்பதை, 'தந்தை செல்வா' அன்றே, எவ்வளவு 'தீர்க்கதரிசனகாக' சொல்லிச் சென்றிருக்கிறார்.
*

## றொறன்ரோ மாநகர சபை உறுப்பினர் மீது மனித உரிமை முறைப்பாடு செய்ய கனடிய கம்யூனிஸ்ட் கட்சி ஆலோசனை!

றொறன்ரோ மாநகரசபை முதல்வர் றொப் ∴போர்ட் (Rob Ford) அவர்களின் நெருங்கிய சகாவான மாநகர சபை உறுப்பினர் கியோர்கியோ மம்மொலிற்றி (Giorgio Mammoliti) மீது, மனித உரிமை முறைப்பாடொன்றைத் தாக்கல் செய்வது பற்றி தமது கட்சி ஆலோசித்து வருவதாக, கனடிய கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்ராறியோ மாகாணத் தலைவர் தெரிவித்துள்ளதாக, Metro நாளிதழ் செய்தியொன்றை வெளியிட்டுள்ளது. மாநகரசபை உறுப்பினர் மம்மொலிற்றி ஆகஸ்ட் 12ம் திகதி கூறுகையில், மாநகரசபையின் ஆறு அல்லது ஏழு உறுப்பினர்கள், கம்யூனிஸ்ட்டுகள் என்றும், அவர்கள் மாநகர அரசாங்கம் எல்லாத் தனியார் உடமைகளையும் சுவீகரிப்பதுடன், றொறன்ரோ வாசிகளின் சிந்தனைகளைக் கட்டுப்படுத்தவும் கோருவதாகக் குறிப்பிட்டிருந்தார்.இதுபற்றி தனது வானொலி உரையொன்றில் Elizabeth Rowley கூறுகையில், மம்மொலிற்றியின் உரையை 1940கள் 50களில் அமெரிக்க செனட்டரான ஜோசப் மெக்கார்த்தியின் (Joseph McCarthy) கம்யூனிச விரோத உரைகளுடன் ஒப்பிட்டிருந்தார் எனவும் Metro குறிப்பிட்டிருக்கிறது.

✱ ✱ தனிச்சுற்றுக்கு மட்டும் - Private Circulation only ✱ ✱

# செய்திகள் ஊடாக இலங்கை

## ✷ இலங்கை கைதிகளில் 40 வீதம் போதைவஸ்து குற்றவாளிகள்!

இலங்கைச் சிறைச்சாலைகளில் தற்போது வைக்கப்பட்டிருக்கும் ஆயிரக்கணக்கான கைதிகளில், 40 வீதமானோர் போதை வஸ்துடன் தொடர்புடையவர்கள் எனத் தகவல் ஒன்று கூறுகிறது. கைது செய்யப்படாதோரின் தொகை எவ்வளவோ? ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐ.தே.க அரசு 1977ல் ஆட்சிக்கு வந்தபோது கொண்டுவந்த கட்டுப்பாடற்ற திறந்த பொருளாதாரக் கொள்கை காரணமாகவும், ஏகாதிபத்திய உலக மயமாக்கல் காரணமாகவுமே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. ✷

## ✷ வடபகுதி விவசாயிகள் சாதனை!

போர் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து, கடந்த 2 வருடங்களாக வடபகுதி மக்கள் தமது பாரம்பரியத் தொழிலான விவசாயத்தில் அதிக முனைப்புக்காட்டி வருகின்றனர். போர் நடைபெற்று வந்த காலகட்டத்தில், அரசாங்கத்தின் பொருளாதாரத் தடை ஒரு பக்கமும், புலிகளின் நில அபகரிப்பு – அரசாங்கம் அனுப்பிய கொஞ்ச நஞ்ச உரம், கிருமிநாசினி வகைகளைச் சூறையாடியமை என்பன காரணமாகவும், பலர் விவசாயத்தைக் கைவிட்டிருந்தனர். போர் முடிந்து, சமாதான சூழ்நிலை உருவானதைத் தொடர்ந்து, இப்பொழுது வட பகுதியில் மொத்தமாக 9,60,00 ஹெக்டயர் நிலத்தில் விவசாயம் செய்கை பண்ணப்படுகிறது. அதன் மூலம் 2010ல் 3,90,00 மெட்ரிக் தொன் நெல்லை விளைவித்து, வட பகுதி விவசாயிகள் சாதனை படைத்துள்ளனர். ✷

## ✷ இரண்டு வருடங்களில் 11,240 கொள்ளைச் சம்பவங்கள்!

கடந்த இரண்டு வருடங்களில் இலங்கை முழுவதும் 11,240 கொள்ளைச் சம்பவங்கள் நடந்துள்ளதாக பொலிசில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அவற்றில் 4042 சம்பவங்கள் சம்பந்தமாக மட்டுமே பொலிசாரினால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. குற்றம் செய்பவர்களில் மூன்றிலொரு பங்கினர் மட்டுமே சட்டத்தின் முன் நிறுத்தப்படும் நிலை இருக்குமானால், அது பொலிசாரின் திறமையீனமா அல்லது சட்டத்தில் உள்ள ஓட்டையா என்பதை அரசு கவனத்தில் எடுப்பது அவசர அவசியமாகும். ✷

## ✷ உல்லாசப் பயணிகளின் தொகை அதிகரிப்பு

இலங்கைக்கு 2011ம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் உல்லாசப் பயணிகளின் வருகையால் 5.8 பில்லியன் ரூபா லாபமாகக் கிடைத்துள்ளது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், இந்தக் காலகட்டத்தில் உல்லாசப் பயணிகளின் வருகை 36.9 வீதத்தால் அதிகரித்துள்ளது. புலிகளுடனான இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இலங்கை அரசு இழைத்ததாகக் கூறப்படும் போர்க்குற்ற மீறல்கள் பற்றி மேற்கு நாடுகளும், மனித உரிமை அமைப்புகளும் தொடர்ச்சியாகக் குற்றச்சாட்டுகளை சுமத்தி வரும் நிலையிலும், இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளமை, அந்தப் பிரச்சாரங்களை மக்கள் பெரிதாகச் சட்டை செய்யவில்லை என்பதையே எடுத்துக் காட்டுகின்றது. ✷

## ✷ மாகாணசபைகளின் காணி அதிகாரத்தை உறுதிப்படுத்தும் முக்கியமான நீதிமன்றத் தீர்ப்பு!

இலங்கையில் மாகாணசபைகளுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் அதிகரித்து வரும் நிலையில், தென் மாகாணசபைக்குட்பட்ட பிரதேசத்தில், மாகாண சபையின் காணி அதிகாரம் சம்பந்தமாக முக்கியமான தீர்பபொன்றை, மேன்முறையீட்டு நீதிமன்றம் அண்மையில் வழங்கியுள்ளது.

தென் மாகாணத்திலுள்ள 'பொரவகம' கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த, ஹெச்.ஹெச்.அலிஸ் நோனா என்பவரின் காணி வழக்கொன்று தென் மாகாண மேல் நீதிமன்றில் நடைபெற்ற பொழுது, அந்த விடயம் சம்பந்தமாக தீர்ப்பு வழங்கும் அதிகாரம் தனக்கு இல்லையென, அம்மேல் நீதிமன்ற நீதிபதி தீர்ப்பு வழங்கியிருந்தார். அந்தத் தீர்ப்பை எதிர்த்து, மனுதாரர் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு முறைப்பாடு செய்திருந்தார். அது சம்பந்தமாக மேன்முறையீட்டு நீதிபதி வழங்கிய தீர்ப்பில், காணி உரிமைப் பிரச்சினைகள் சம்பந்தமாக தீர்ப்பு வழங்கும் அதிகாரம், மாகாண மேல்நீதி மன்றுக்கு உண்டு எனத் தீர்ப்பளித்துள்ளார்.

இந்தத் தீர்ப்பு, மாகாணசபைகளின் காணி அதிகாரம் பற்றிய விடயத்தில் ஒரு முக்கியமான திருப்புமுனையாக விளங்குகிறது என, சட்ட வல்லுனர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். ✷